## அதானி ஊழல் விவகாரம்:

# பிரதமர் மோடி மீது குற்றஞ்சாட்ட தயக்கம் ஏன்?

## டாக்டர் ராமதாசுக்கு ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ காட்டமான கேள்வி!

சென்னை, நவ. 27-

**“அதானி ஊழல் பிரச்சினையில் பிரதமர் மோடி மீது குற்றஞ்சாட்ட தயக்கம் ஏன்?” என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அவர்கள் டாக்டர் ராமதாசுக்கு காட்டமாகக் கேள்வி எழுப்பியுள்ளார்.**

இது குறித்து வைகோ அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

அதானியின் கிரீன் எனர்ஜி நிறுவனம் ஒன்றிய அரசு நிறுவனமான எஸ்.இ.சி.ஐ (Solar Energy Corporation of India Limited) சூரிய ஒளி மின் திட்ட ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக இந்திய மின்வாரிய அதிகாரிகளுக்கு 250 மில்லியன் டாலர் (சுமார் 2,100 கோடி ரூபாய்) லஞ்சம் கொடுத்ததை மறைத்து, அமெரிக்க நிறுவனங்களிடமிருந்து 20,000 கோடி முதலீடு பெற்றுள்ளது. இந்த ஊழல் குற்றச்சாட்டில் அதானி உள்பட 7 பேருக்கு நியூயார்க் நீதிமன்றம் நவம்பர் 21ஆம் தேதி அன்று பிடிவாரண்ட் பிறப்பித்திருக்கிறது.

இந்த வழக்கில் அதானி குழுமத்தின் தலைவர் கௌதம் அதானி மற்றும் அவரது மருமகனும் அதானியின் கிரீன் எனர்ஜி நிறுவன நிர்வாக இயக்குனருமான சாகர் அதானி ஆகியோருக்கு சம்மன் அனுப்பப்பட்டுள்ளது. இந்த சம்மன் கிடைத்த 21 நாட்களுக்குள் அவர்கள் மீதான குற்றச்சாட்டுக்கு பதில் அளிக்க வேண்டும். இல்லையென்றால் சிவில் நடைமுறை சட்ட விதி 12 இன் படி புகார் மீதான தீர்ப்பு அதானி குழுமத்திற்கு எதிராக அமையும் என்றும், அமெரிக்க நீதிமன்றம் அனுப்பிய சம்மனில் கூறப்பட்டுள்ளது. ஹிண்டன்பார்க் அறிக்கை முதல் சூரிய ஒளி மின் திட்ட ஒப்பந்த ஊழல் மீதான நியூயார்க் நீதிமன்ற வழக்கு வரை அதானி குழுமம் செய்த அனைத்து முறைகேடுகளும் இந்திய பொருளாதாரத்தில் விபரீதமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதால் நாடாளுமன்ற இரு அவைகளின் கூட்டு விசாரணை குழுவுக்கு நரேந்திர மோடி அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்ற கோரிக்கை நாடு முழுவதும் வலுத்து வருகிறது.

**அதானியை உடன் அழைத்துச் சென்றது ஏன்?**

தலைமை அமைச்சர் நரேந்திர மோடி முதன் முதலில் ஆஸ்திரேலியாவுக்குச் சென்ற போது, அவர் பயணித்த விமானத்திலேயே கௌதம் அதானியை உடன் அழைத்துச் சென்றார். அதுமட்டுமின்றி, அதானி நிறுவனத்திற்கு 6200 கோடி கடன் கொடுப்பதற்கு பரத ஸ்டேட் வங்கிக்கு உத்தரவிட்டு ஏற்பாடு செய்தார் என்பதெல்லாம் நாடறிந்த உண்மைகள்.



**வதந்திகளை செய்தியாக்கும் ராமதாஸ்!**

எனவே, இந்தப் பிரச்சனையில் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி தான் குற்றவாளிக் கூண்டில் நிற்க வேண்டிய சூழல் உருவாகி இருக்கிறது.

இந்தச் சூழலில் அதானி குழுமத்திற்கு நெருக்கமான பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் மீது குற்றச்சாட்டுகளை தொடுக்க வேண்டிய பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனத் தலைவர் மருத்துவர் ராமதாஸ் அவர்கள் வதந்திகளை செய்தியாக்கும் நோக்கத்தில் திராவிட மாடல் ஆட்சி நடத்தும் தமிழக முதலமைச்சர் தளபதி ஸ்டாலின் அவர்கள் மீது குற்றம் சாட்டி அறிக்கை விடுத்தார்.

மருத்துவர் ராமதாஸ் அவர்கள் தலைமை அமைச்சர் மீது ஏன் குற்றச்சாட்டு முன்வைக்க வில்லை? எதிர்கட்சிகளை மிரட்டுவதற்கு அமலாக்கத்துறை உள்ளிட்ட அமைப்புகளை பயன்படுத்தும் ஒன்றிய அரசு, அதானி மீதான குற்றச்சாட்டுகளுக்கு எதிராக இதுவரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லையே? ஏன் இதுகுறித்து பா.ம.க. வலியுறுத்தவில்லை?

**முதலமைச்சர் பதிலளிக்கக் வேண்டிய அவசியமில்லை!**

தி.மு.க. மீதும், தமிழக அரசு மீதும் புழுதி வாரித் தூற்றும் நோக்கத்தோடு அறிக்கை கொடுத்தார். அது குறித்து பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் முதலமைச்சரை கடுமையாக விமர்சித்து அறிக்கை தந்து இருக்கிறார். பொறுப்பற்ற பொய் வதந்திகளுக்கு எல்லாம் முதலமைச்சர் பதில் கூற வேண்டிய அவசியம் இல்லை.

அதனால்தான் முதலமைச்சர் அவர்கள் சரியான பதிலை ஒரு வரியில் சொல்லிவிட்டார்.

இந்தப் பிரச்சனையில் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி அவர்கள் மீது குற்றச்சாட்டு வைக்க பாமக தயாரா? பாரதிய ஜனதா கட்சியுடன் கூட்டணி வைத்துக்கொண்டு பிரச்சனையை திசை திருப்ப பா.ம.க. தலைவர் முயற்சிக்கிறார். ஆனால் அந்த முயற்சி எல்லாம் பயனற்று போகும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

---

## திருவாரூரில் இலக்கிய அணிக் கூட்டம்!

திருவாரூர், நவ.27-

திருவாரூர் மாவட்டத்தில்உள்ள ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களுக்கு புதிதாக நியமிக்கப்பட்ட இலக்கிய அணியின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அறிமுக ஆலோசனை கூட்டம் மாவட்ட செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ., தலைமையில் நடைபெற்றது. நகர செயலாளர் வரை. எஸ்.பிரகாஷ் முன்னிலை ஏற்றார்.

தமிழ்நாடு முதல்வர், திராவிட நாயகர் தளபதி அவர்களின் வழிகாட்டுதல்களோடும்,துணை முதலமைச்சர் இளைஞர்களின் நம்பிக்கை நட்சத்திரம் தமிழ்நாடு அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வாழ்த்துக்களோடும், திருவாரூர் மாவட்டத்திற்கு மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் அவர்களின் ஒப்புதலோடும் ,தலைமை கழகத்தால் நியமிக்கப்பட்டிருந்த ஒன்றிய , நகர, பேரூர் கழகங்களின் இலக்கிய அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்களின் அறிமுக ஆலோசனை கூட்டம் திருவாரூர் ஹோட்டல் காசீஸ் - இன்னில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு மாவட்ட செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ. அவர்களை தலைமை ஏற்றார். நகர செயலாளர் வாரை.எஸ்.பிரகாஷ் அவர்கள் முன்னிலை ஏற்றார். மாவட்ட அமைப்பாளர் என்கண் மணி வரவேற்புரை வாசிக்க, துணை தலைவர் தியாகராஜன், துணை அமைப்பாளர்கள் ஜாகிர் உசேன்,சோம. இளங்கோவன்,சோம சுந்தரம், செல்லத்துரை ,தங்க . குணசேகரன் உள்ளிடோர் கருத்துரையாற்றினார். பாலமுத்து நன்றி கூறினார்.

இலக்கிய அணி அமைப்பளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்களை நியமித்த கழக தலைவர் தமிழ்நாடு முதலவர் தளபதி, இளைஞர்அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மாவட்ட செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் உள்ளிட்டோருக்கு நன்றி, கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை சிறப்பாக கொண்டாடுவது, சட்டமன்ற தேர்தலுக்கு இலக்கிய அணி தீவிர களப் பணியாற்றுவது, கழக அரசின் சாதனைகளை துண்டு பிரசுரங்கள், சமூக வலைத் தளங்கள் வழியே மக்களிடம் கொண்டுசெல்வது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் திருவாரூர் மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பங்கேற்றனர்.

---

## அதானி விவகாரம்: முதலமைச்சரை மையப்படுத்தி லாவணி நடத்தும்

# பா.ம.க., பா.ஜ.க.வின் நோக்கம் ஒருபோதும் நிறைவேறாது!

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநில செயலாளர் இரா.முத்தரசன் அறிக்கை!

சென்னை, நவ. 27-

அதானி விவகாரத்தில் முதலமைச்சரை மையப் படுத்தி லாவணி நடத்தி வரும் பா.ம.க., பா.ஜ.க. வின் நோக்கம் ஒருபோதும் நிறைவேறாது என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தெரிவித்துள்ளார்.



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயலாளர் இரா. முத்தரசன் விடுத்துள்ள செய்தி அறிக்கை.

முதலமைச்சர் கருத்தை திரித்து கூறுவது, அதானி மீதான குற்றச்சாட்டுக்களை மூடி மறைக்கும் முயற்சியாகும்.

பிரதமர் மோடியின் நெருங்கிய நண்பரும், தொழில் அதிபருமான அதானி மீதும் அவரது குழும நிறுவனங்களின் அதிகாரிகள் மீதும் அமெரிக்க அரசின் நீதித்துறை ஊழல் குற்றச்சாட்டுகளை முன் வைத்துள்ளது. அதானி குழும நிறுவனம் தயாரிக்கும் சூரிய சக்தி மின்சாரத்தை அதிக விலையில் கொள்முதல் செய்ய மாநில அரசு அதிகாரிகளுக்கு ரூ.2 ஆயிரத்து 29 கோடி வரை அதானி நிறுவனம் கையூட்டு கொடுத்திருப்பதாக கூறியுள்ள குற்றச்சாட்டில், ஒடிஷா, ஜம்மு காஷ்மீர், ஆந்திரா என்ற வரிசையில் தமிழ்நாடும் இடம் பெற்றுள்ளது.

இந்தச் செய்தி வெளியானதும் அடுத்த வினாடியே தமிழ்நாடு அரசின் மின் துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி “ அதானி நிறுவனத்துடன் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் எந்தவித ஒப்பந்தமும் செய்ய வில்லை” என்பதை அறிக்கை மூலம் தெளிவு படுத்தியுள்ளார்.

இந்த நிலையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் அதானி நிறுவனம் தொடர்பாக வினா எழுப்பப்பட்டது. இதற்கு முதலமைச்சர் “அது பற்றி ஏற்கனவே துறையின் சார்பாக அறிக்கை வெளியிட்டு தெளிவு படுத்தியுள்ளார்” என்று பொறுப்பாக பதில் அளித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து பாமக நிறுவனத் தலைவரின் அறிக்கையை மேற்கோள் காட்டி, முதலமைச்சரை ஆத்திரமூட்டும் நோக்கில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இதற்கு பதிலளித்த முதலமைச்சர் “அவர் தினம் ஒரு அறிக்கை வெளியிட்டுக் கொண்டிருக்கிறார் என்பதை சுட்டிக்காட்டி அதற்கெல்லாம் பதில் இல்லை” என்று கூறியுள்ளார்.

கேள்வி பதில் நிகழ்வை பயன்படுத்தி பா.ம.க., பா.ஜ.க. அதன் பரிவாரங்கள் ஒரே குரலில் முழங்கி, அதானி மீதான குற்றச்சாட்டுகளை மூடி மறைத்து, மக்களின் கவனத்தை திசை திருப்பும் மலிவான செயலில் ஈடுபட்டு வருகின்றனர்.

அமெரிக்க நீதித்துறை குற்றம் சாட்டியுள்ள நிலையில், வெளியுறவு அதிகாரத்தை கையில் வைத்துள்ள ஒன்றிய அரசு மத்திய புலனாய்வுத்துறை விசாரணக்கு உத்தரவு பிறப்பிக்கவில்லை. நாடாளுமன்ற கூட்டுக் குழு அமைத்து விசாரிக்கவும் முன் வரவில்லை. மாநில அரசை புறந்தள்ளி அதிகார வர்க்கத்துடன் தொடர்பு கொண்டுள்ள குழும நிறுவனங்களின் மோசடி குறித்தும் பேசவில்லை.

இவைகள் அனைத்தையும் மக்கள் கவனத்துக்கு வராமல் தடுக்க பா.ஜ.க.வும், பா.ம.க.வும் படாத பாடு, படுகிறது. முதலமைச்சரை மையப்படுத்தி லாவணி நடத்தி வரும் பா.ம.க., பா.ஜ.க. பரிவாரங்களின் நோக்கம் ஒரு போதும் நிறைவேறாது என்பதை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

## குறுகிய கால கடனை உயர்த்துதல், டி.டி.எஸ். பிடித்தங்களுக்கு விலக்கு உள்ளிட்ட

# கூட்டுறவுத் துறை தொடர்பான கோரிக்கைகள்!

## ஒன்றிய அமைச்சர் அமித்ஷாவை – அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் சந்தித்து மனு!

புதுடெல்லி, நவ. 27-

25.11.2024 அன்று ஒன்றிய உள்துறை மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் அமித்ஷாவை கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் நேரில் சந்தித்து கூட்டுறவுத்துறை தொடர்பான கோரிக்கை மனுவினை அளித்தார்.

ஒன்றிய உள்துறை மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களுக்கு சமர்ப்பிக்கும் கோரிக்கை விபரம் வருமாறு:-

NABARD வழங்கும் சலுகை மறுநிதியளிப்பு, மாநிலத்தில் உள்ள கூட்டுறவுகளின் ஒட்டுமொத்த குறுகிய கால கடன் அளவிற்கேற்ப உயர்த்தி வழங்கப்பட வேண்டும்.



கூட்டுறவு சங்கங்களின் வருமான வரி TDS பிடித்தங்களிலிருந்து விலக்கு அளிக்கப்பட வேண்டும்.

NCDC மூலம் ICDP போன்ற திட்டங்கள் நியாயமான வட்டி விகிதத்தில் கூட்டுறவு சங்கங்களுக்கு கடன் வழங்க வேண்டும்.

கூட்டுறவு சங்கங்களின் தயாரிப்புகள் மற்றும் சேவைகளுக்கு GSTயிலிருந்து விலக்கு அளிக்கப்பட வேண்டும்.

வித்யா லட்சுமி, சூர்யாகர், MSME திட்டங்கள் போன்ற பல்வேறு ஒன்றிய அரசு திட்டங்களின் கீழ் பயனாளிகளுக்கு கடன் வழங்க தகுதியான வங்கிகளின் பட்டியலில், கூட்டுறவு வங்கிகள் சேர்க்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

23 கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையங்களின் உள்கட்டமைப்பைச் சீரமைக்க இந்திய தேசிய கூட்டுறவு ஒன்றியத்திற்கு அனுப்பப்பட்ட சுமார் ரூ.124 கோடி முன்மொழிவு சாதகமாக பரிசீலிக்க வேண்டும்.

KCC திட்டத்தின் கீழ் கடன்களை சொந்த நிதியிலிருந்து வழங்கும் வங்கிகளுக்கு 1.5% குறைக்கப்பட்ட வட்டி மானியத்தில் இருந்து 2% ஆக GOIஆல் உயர்த்தி வழங்கப்பட வேண்டும்.

KCCAH கடன்களுக்கான தனி மறுநிதிஉதவி வசதியினை NABARD பிரத்தியேகமாக வழங்க வேண்டும்.

இணையவழி வங்கியியல் (Net Banking Services) சேவைகள் உரிமம் கூட்டுறவு வங்கிகளுக்கும் விரைந்து வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன் மற்றும் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் டாக்டர் என்.சுப்பையன் உடனிருந்தனர்.

---

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளையொட்டி

# தமிழ்நாடு முழுவதும் பல்வேறு நல உதவிகள்!

## மின்கழக தொ.மு.ச. பொதுச் செயலாளர் பா.மணிமாறன் அறிக்கை!

சென்னை, நவ. 27-

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளையொட்டி தமிழ்நாடு முழுவதும் பல்வேறு நல உதவிகள் வழங்கி சிறப்பிப்பதாக மின்கழக பொதுச் செயலாளரும், தொ.மு.ச. பேரவை இணைப் பொதுச் செயலாளருமான பா.மணிமாறன் தெரிவித்துள்ளார்.

இது குறித்த அவரது அறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டு மக்களின் நெஞ்சங்களின் நீங்காமல் நிறைந்திருக்கும், தமிழ்நாட்டு தாய்மார்கள் எங்கள் வீட்டு பிள்ளை என்று போற்றப்படும், தமிழ்நாட்டு இளைஞர்களின் எதிர்காலம், கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் சின்னவர் அவர்களின் பிறந்த நாள் விழா, தமிழ்நாடு முழுவதும் மின்கழகத் தொமுச சார்பாக நலத்திட்ட உதவிகள், இனிப்புகள், ஏழை எளியோருக்கு அறுசுவை உணவுகள் வழங்கி சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

தமிழ்நாடு மின்கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் சார்பாக தமிழ்நாடு முழுவதும் உள்ள திட்டச் சங்கங்களின் சார்பாக 27.11.2024, அன்று இனிப்புகள் வழங்கியும், தூய்மை பணியாளர்கள் , பொதுமக்களுக்கு நல உதவிகள் மற்றும் அறுசுவை உணவு வழங்கியும் சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

மின்கழகத் தொ.மு.ச. தலைமை சங்க சார்பாக 27.11.2024 அன்று சென்னை அண்ணாசாலையில் தமிழ்நாடு மின்சார வாரியம் தலைமை அலுவலகத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள், பொறியாளர்கள், அலுவலர்கள் மற்றும் பொதுமக்களுக்கு என 3000 பேர்களுக்கு இனிப்புகள் வழங்கியும், தூய்மை பணியாளர்கள், காவல் பணியாளர்கள் மற்றும் பொது மக்கள் என 300 பேருக்கு ரூ.1200/ மதிப்புள்ள அரிசி, மளிகை பொருட்கள் உள்ளிட்ட தொகுப்பு பைகளில் நல உதவிகள் வழங்கப்படுகிறது. பணியாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு மதியம் 300 பேருக்கு அறுசுவை உணவும் வழங்கி சிறப்பாக கொண்டாடப்படுகிறது.



கடந்த அக்டோபர் மாதம் கடும் மழையிலும், பகல், இரவு என பாராமல் தாய்மார்களையும், இளைஞர்களையும், குழந்தைகளையும் காத்தவர். தமிழ்நாடு மக்களின் துயர் துடைக்கும் மாபெரும் இயக்கமாம், திராவிட முன்னேற்றக்கழகத்தின் தலைவர்களின் வழித்தோன்றல்,

இளைஞர்களின் எதிர்காலம், கழக இளைஞரணி செயலாளர், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் பாசத்திற்குரிய சின்னவர் அவர்களின் பிறந்த நாள் விழாவை தமிழ்நாடு முழுவதும் மின்கழகத் தொமுச சார்பாக அனைத்து திட்டச் சங்கங்கள் சிறப்பாக கொண்டாடுகிறார்கள்.

இவ்வாறு, பா.மணிமாறன் மாநில பொதுச்செயலாளர் / மின்கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம், இணைப் பொதுச்செயலாளர் / தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

## விமானக் கட்டண உயர்வால் பாதிக்கப்படும்

# சுற்றுலாத்துறையை மீட்க ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

## கழக நாடாளுமன்றக் குழு துணைத் தலைவர் தயாநிதி மாறன் எம்.பி. கேள்வி!

புதுடெல்லி, நவ.27-

விமானக் கட்டணம் உயர்வு போன்ற காரணங்களால் பாதிக்கப்படும் உள்நாட்டுச் சுற்றுலாவை மீட்கவும், விமானக் கட்டண நிர்ணயத்தில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்யவும் ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன என்பன போன்ற பல்வேறு கேள்விகளை ஒன்றிய சுற்றுலாத்துறை அமைச்சகத்திடம் நாடாளுமன்றத்தில் கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவர் தயாநிதி மாறன் வினவினார்.

அதன் விவரங்கள் பின்வருமாறு : -

உள்நாட்டு விமானங்களின் கட்டணம் அதிகரித்து வருவதால் சுற்றுலாத்துறையில் ஏற்பட்டுவரும் பாதிப்புகள் குறித்து ஒன்றிய அரசு சமீபத்தில் ஏதேனும் ஆய்வு மேற்கொண்டதா என்றும் அப்படியானால் அதன் விவரங்களைத் தெரியப்படுத்தவும் எனக் கேள்வி எழுப்பினார்.



உள்நாட்டுச் சுற்றுலா விமானக் கட்டணம், பயணிகளுக்கு குறைந்த விலையில் கிடைப்பதையும், வெளிப்படையான விலை நிர்ணயத்தையும் உறுதி செய்ய, விமான நிறுவனங்கள் மற்றும் ஒழுங்குமுறை ஆணையங்களுடனும் இணைந்து, ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன என்று கேள்வி எழுப்பினார்.

சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கைக் குறைவு காரணமாக பாதிக்கப்பட்டு வரும் ஹோட்டல், உணவகங்கள், சுற்றுலா அமைப்பாளர்களின் வர்த்தகம் உள்ளிட்ட உள்ளூர்ச் சுற்றுலா வணிகத்தில் ஏற்பட்டு வரும் பாதிப்புகள் குறித்து ஒன்றிய அரசு ஏதேனும் ஆய்வு மேற்கொண்டுள்ளதா எனக் கேள்வி எழுப்பினார்.

உள்நாட்டுச் சுற்றுலாவுக்கான விமானப் பயணக் கட்டணம் அதிகரிப்பதை, மானியம் அல்லது ஊக்கத்தொகை போன்ற திட்டங்கள் மூலம் சரிசெய்ய ஒன்றிய சுற்றுலாத்துறை அமைச்சகமும், விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சகமும் இணைந்து செயல்படும் திட்டம் உள்ளதா எனக் கேள்வி எழுப்பினார்.

விமானக் கட்டணம் போன்ற பயணச் செலவுகளின் மாறுபாடுகளால், உள்நாட்டுச் சுற்றுலாத்துறை பெரிதும் பாதிக்காமல், நிலைத்த வளர்ச்சியைப் பெறுவதற்கான ஒன்றிய அரசின் நீண்டகாலத் திட்டங்கள் என்ன என தயாநிதி மாறன் எம்.பி. கேள்வி எழுப்பினார்.

---

# சைதை கிழக்கு பகுதியில் 1000 பேருக்கு அறுசுவை உணவு!

சென்னை, நவ. 27–

கழக இளைஞர் அணிச் செயலாளர் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளையொட்டி இன்று (27.11.2024 – புதன்கிழமை) சைதை கிழக்குப் பகுதி அலுவலகத்தில் 1000 பேருக்கு அறுசுவை உணவினை வழங்கி பகுதிச் செயலாளர் இரா.துரைராஜ் எம்.சி. தலைமையில் அமைச்சர் மா.சுப்பிர மணியன் தொடங்கி வைக்கிறார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு இன்று (27.11.2024 – புதன்கிழமை) பகல் 11.00 மணிக்கு சென்னை தெற்கு மாவட்டம், சைதை கிழக்கு பகுதிக் கழக அலுவலகத்தில், பகுதிக் கழகச் செயலாளரும், 13வது வார்டு குழுத் தலைவருமான இரா. துரைராஜ் தலைமையில் சென்னை தெற்கு மாவட்டச் செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சருமான மா.சுப்பிரமணியன் 1000 பேருக்கு அறுசுவை உணவு வழங்குகிறார்.

நிகழ்ச்சியில் கழக நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்.

எனவே சைதை கிழக்கு பகுதியில் உள்ள கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், மூத்த முன்னோடிகள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் என சைதை கிழக்கு பகுதிச் செயலாளரும், 13வது வார்டு குழு தலைவருமான இரா. துரைராஜ் கேட்டுக் கொண்டுள்ளார்.

---



மாற்றுக் கட்சிகளில் இருந்து திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும் பள்ளிக்கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி முன்னிலையில், அ.தி.மு.க. வட்டகழகப் பொருளாளர் துரை, தே.மு.தி.க ஆரோக்கியராஜ், அ.மு.மு.க மாவட்ட இளைஞர் பாசறை செயலாளர் மணிகண்டன் ஆகியோர் தலைமையில் அக்கட்சிகளில் இருந்து விலகி திருச்சி தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் திராவிட முன்னேற்ற கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர். திருச்சி மாநகரம் காட்டூர் பகுதி மற்றும் மணப்பாறை தொகுதி மருங்காபுரி ஒன்றியம் ஆகிய பகுதிகளில் இருந்து மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்டோர் அக்கட்சிகளில் இருந்து விலகி தி.மு.கவில் தங்களை இனைத்துக் கொண்டனர். இந்நிகழ்வில் மாநகரக் கழகச் செயலாளர் மு. மதிவாணன், பகுதி கழகச் செயலாளர் நீலமேகம், ஒன்றிய கழகச் செயலாளர் பழனியாண்டி ஆகியோர் உடன் இருந்தனர்.